உ

திருஞானசம்பந்த சற்குருவே துணை



OFFICE OF THE REGISTRAR OF BOOKS
21 JUL 1954
MADRAS

மகாவித்துவான் திரு. மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள்
இயற்றிய
திருஞானசம்பந்த சுவாமிகள்

# ஆனந்தக்களிப்பும்

தமிழாசிரியர் திரு. கோவிந்தசாமி ஐயரவர்கள்
இயற்றிய
திருஞானசம்பந்த சுவாமிகள்

# சிந்தும்

இஃது திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள்
வழிவழி வந்த
மதுரை ஆதீனம் 290-வது பட்டம் திருப்பெருந்திரு.
சுவாமிநாத தேசிக குருமகா சந்நிதானம்
அவர்களின்

## அருள்மிகு அறுபதாம் ஆண்டு ஆட்சி நிறைவு விழாவின்

நினைவு மலராக வெளியிடப்பெற்றது.

(10-7-1954)

விவேகாநந்தா அச்சகம்,
மதுரை.




மதுரைத் திருஞானசம்பந்த
சுவாமிகள் ஆதீனம்
290-வது பட்டம் ஸ்ரீலஸ்ரீ
சுவாமிநாத தேசிக
குரு மகாசந்நிதானம்.

←

CONNEMARA PUBLIC LIBRARY
10 SEP 1956
MADRAS

மதுரைத் திருஞானசம்பந்த
சுவாமிகள் ஆதீன இளவரசு
திருப்பெருந்திரு
திருவருள் தவயோக
சோமசுந்தர தேசிக
பரமாசாரிய சுவாமிகள்

→



உ

திருவருள் துணை.

மகாவித்துவான் திரு. மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள் இயற்றிய

# திருஞானசம்பந்த சுவாமிகள்

## ஆனந்தக்களிப்பு

ஆனந்த மானந்தந் தோழி — திரு
வாளர்சம் பந்த ரருள்விளை யாடல்
ஆனந்த மானந்தந் தோழி.

1. பார்புகழ் காழி நகரிற் — சிவ
பாத விருதயர் செய்த தவத்தாற்
சீர்புகழ் மிக்க மகவா — ஐயர்
திருவ ருளாலவ தாரஞ்செய் தாரால். (ஆனந்த)

2. கூடும் பருவமோர் மூன்றி — லம்மை
கொங்கை சுரந்த கொழுஞ்சுவைத் தீம்பா
லூடுபொன் வள்ளத்தி னூட்ட — உண்டு
ஞானசம் பந்த ரெனப்பொலிந் தாரால். (ஆனந்த)

3. சொல்லு மயனரி யாலு — மென்றுஞ்
சுட்டி யறியப் படாத பொருளை
யொல்லுஞ்செந் தாமரை யன்ன — செங்கை
யோர்விர லாற்சுட்டிக் காட்டினின் றாரால். (ஆனந்த)

4. வைதிக சைவந் தழையப் — பெரு
மண்ணுல காதி மகிழ்சிறந் தோங்க
வுய்திற மாந்தமிழ் வேதந் — தோ
டுடைய செவியனென் றாரம்பித் தாரால். (ஆனந்த)

5. விண்ணும் புவியுங்கொண் டாடும் — தமிழ்
வேத மொழியும் பொழுதொற் றிடுமா
றெண்ணுந் திருக்கோலக் காவி — லைந்
தெழுத்தும் பொறித்தபொற் றாளம்பெற் றாரால்.(ஆன)

6. என்னென் றியானுரை செய்கே — ஊைய
ரேழிசை யோங்க வினிமை ததும்பப்
பன்னும் புகழ்த்திரு வாக்காற் — கொடும்
பாலை குளிர்நெய்த லாகிய தென்னின். (ஆனந்த)

7. மூவுல கும்புகழ் தில்லை — வளர்
மூவா யிரர்கண நாதராய்த் தோன்றப்
பாவு மிசையுரு வாய புகழ்ப்
பாணருக் காங்கறி வித்துநின் றாரால். (ஆனந்த)

8. மும்மை யுலகும் புகழச் — செழு
முத்தின் சிவிகை குடைதிருச் சின்னஞ்
செம்மை யரத்துறை மேய — தேவ
தேவ னருளச் சிறப்பிற்பெற் றாரால். (ஆனந்த)

9. தாரை திருச்சின்ன மெல்லாம் — பர
சமயத்தின் கோளரி வந்தன னிந்தப்
பாரையுய் விப்பவன் வந்தான் — ஞானப்
பாலாரு வாயன்வந் தானென வூதும். (ஆனந்த)

10. முந்திய மாமறை யின்க — ஊைய
முற்று மொழிய மொழிந்து மறையோர்க்
கந்தியின் மந்திர மோரிற் — றிரு
வைந்தெழுத் தேயென் றருளிச்செய் தாரால்.(ஆனந்த)

11. அண்டர் புகழ்ந்துகொண் டாடும் — பாச்சி
லாச்சிரா மத்தெம் மடிகண்மு னன்பு
கொண்ட மழவன் மகளைப் — பற்று
கொடிய முயலக நோயொழித் தாரால். (ஆனந்த)

12. கொங்கி னடியரைச் சார்ந்த — வெங்
குளிர்ப்பிணி யாதி குலைந்தொழி வெய்த
வெங்கும் புகழ்திரு நீல — கண்ட
மீற்றி னுறுதமிழ் வாய்மலர்ந் தாரால். (ஆனந்த)

13. தாவில்பட் டீச்சரத் தையர் — நன்கு
தந்த மணிமுத்துப் பந்தர் விரும்பி
மேவு திருச்சத்தி முத்தத் — திடை
மெய்ம்மையிற் பெற்றனர் வெங்குரு வேந்தர். (ஆன)

14. தந்தை கருத்து முடிப்பான் — வளஞ்
சீர்பொழி லாவடு தண்டுறை யார்பா
லந்தமின் முத்தமி ழாள — ருல
வாக்கிழி யாயிரம் பொன்னிற்பெற் றூரால். (ஆன)

15. நீலகண் டப்பெரும் பாணர் — திரு
நெஞ்ச முவந்து நெடுங்களி கூரக்
கோலத் தரும புரத்தி — லிசை
கோலிய யாழ்மூரி வாய்மலர்ந் தாரால். (ஆனந்த)

16. மாங்குயில் கூவும் வளஞ்சேர் — திரு
மருகலிற் பிள்ளையார் வாக்கெழு முன்னே
தூங்கி யெழுந்தவன் போல — விடத்
தோய்வா விறந்தவன் றானெழுந் தானல். (ஆனந்த)

17. வீழி மிழலைப் பிரானு — ரெங்கள்
வித்தகர் சண்பை விரகர்முன் றோன்றிக்
காழியிற் றோணியின் மேவும் — வண்ணங்
காட்டுகின் றேமென்று காட்டப்பெற் றூரால். (ஆ)

18. காமரு வீழி மிழலை — யமர்
கண்ணுத லாரடி யார்க்கமு தாக
மாமரு வோர்செம்பொற் காசு — தினம்
வைக்கப்பெற் றூர்சண்பை வந்த விரகர். (ஆனந்த)

19. மன்னிய மாமறைக் காட்டிற் — சண்பை
வந்த கவுணியர் வாய்திற வாமுன்
றுன்னிக் கதவ மடைத்த — திறஞ்
சொல்வி னெவரே வியப்படை யாதார். (ஆனந்த)

20. மானியா ரன்பு மமைச்சிற் — புகழ்
வாய்ந்த குலச்சிறை யாரன்பு மோர்ந்தே
யானி யிலாமறைக் காட்டி — னின்று
மாலவாய் மேவ வெழுந்தன ரையர். (ஆனந்த)

21. செழுமணி யானத் திவர்ந்து — திருச்
சின்ன முழங்கத் திசைதொறு மொய்த்து
வழுவி லடியவர் போற்ற — ஆல
வாய்வந்து காட்சி கொடுத்தனர் யார்க்கும். (ஆன)

22. கூடலின் மேய பிரானுர் — கழல்
கும்பிட் டடியவர் கூட்டங் குலாவ
வாட லமைச்ச ரமைத்த — திரு
வார்மட மேவி யமர்ந்திருந் தாரால். (ஆனந்த)

23. தீய வமணக் கொடிய — ரையர்
திருமடத் திற்செய்த தீமை யருளான்
மேய வழுதி யுடம்பு — பற்றி
வெஞ்சுர.மாசத் திருவாய் மலர்ந்தார். (ஆனந்த)

24. செம்மையில் கூனெடு வெப்பு — நின்ற
சீர்நெடு மாறற்கு நீங்கப் பொலிவு
வெம்மை யமணர்க்கு நீங்க — ஐயர்
மேதகு நீறு திருக்கைதொட் டாரால். (ஆனந்த)

25. அருகர் முகமு மனையா — ரழ
லாங்கிட்ட வேடு மொருங்கு கருகப்
பெருகிய சைவர் முகமு — மையர்
பேரழ லேடும் பசந்தன காணுய். (ஆனந்த)

26. அண்ணுங் கொடிய வமண — ரோரெண்
ணுயிர ருங்கொடுங் கூர்ங்கழு வேற
வெண்ணு முயிர்களி டேற — வையை
யாற்றிட்ட வேடெதி ரேறிய தம்மா! (ஆனந்த)

27. உள்ள நிகரப் புறமு — மிக்
கோங்கிருண் மூடிக் கொடுவினை பூண்ட
கள்ள வமணர்கள் யாருங் — கண்
கலங்கிக் கழுமரத் தேறினர் மாதோ! (ஆனந்த)

28. நந்திய சீர்மலை மங்கை — கொங்கை
ஞானமுண் டார்திரு வாய்மலர் சொல்லே
யுந்தி விடுநெடுங் கோலாச் — சுழ
லோடங் கரையரு குற்றது நோக்காய். (ஆனந்த)

29. வித்தகர் தந்திரு முன்ன — ரூது
மெய்த்திருச் சின்னமெண் ணூது தடுத்த
புத்தன் றலையுருண் டோடச் — சினம்
பொங்கி யுருமொன்று வீழ்ந்தது கண்டாய். (ஆன)

30. வெங்குரு வேந்தர் திருமுன் — வாத
மேன்மேலுஞ் செய்து மெலிவுற்றுத் தோற்றே
அங்குறு புத்தரெல் லோரும் — சைவ
ராகின ரைய ரடிமலர் போற்றி. (ஆனந்த)

31. நாடுல கத்தவர் பெற்றூர் — திரு
நாவுக் கரசுஞ் சிவிகையைத் தாங்கிக்
கூடுமன் போடு மகிழ்ந்து — தவங்
கூடிற் றெனவருங் கோதற்ற பேறு. (ஆனந்த)

32. மன்னன் றிருவீரட் டானங் — காழி
மாமறைக் கன்று மகிழ்ச்சியிற் செல்லப்
பன்னும் புகழ்த்தம்பி ராஞர் — நடம்
பண்ணிய மேன்மைத் திருவரு ளோரின். (ஆனந்த)

33. உய்ய வெண்மையெடுத் தாள்வார் — திரு
வோத்தூரில் யார்க்கு மதிசய மேவ
வையர் திருவருள் வாக்கால் — பல
வாண்பனை பெண்பனை யாயின மாதோ! (ஆனந்த)

34. கச்சியின் மேற்றளி மேய — கருங்
கண்ணனங் கண்ணுத லெண்ணுரு மேவ
வுச்சியின் மாதவர் சூடு — மைய
ருண்மைத் திருவாக் கியற்றிய தோராய். (ஆனந்த)

35. பெற்றனர் யாவர் பெறுவ — ரறம்
பேணு திருவாலங் காட்டுறை யையர்
பற்றுங் கனவினிற் றோன்றி — நம்மைப்
பாட வயர்த்தனை யோவென் றருள. (ஆனந்த)

36. மேவு சமயம் பலவுஞ் — சைவ
மேபொரு ளென்று விரும்பிக்கொண் டாடத்
தூவு மெலும்புபெண் ணாக — அருள்
சொல்லி னதிசய மல்லதெ னுண்டாம். (ஆனந்த)

37. நாட்டும் புகழின் மலிந்த — திரு
ஞானசிந் தாமணி நல்லெழி லென்றுங்
காட்டும் பெருமண நல்லூர் — மணங்
காணவந் தார்சிவம் பூணச்செய் தாரால். (ஆனந்த)

38. ஆரண மாகமம் வாழ்க - புக
ழாறு முகத்திரு ஞானசம் பந்த
காரண தேசிகர் வாழ்க - நெடுங்
கால மவரடி யார்களும் வாழ்க. (ஆனந்த)

ஆனந்த மானந்தந் தோழி - திரு
வாளர் சம்பந்த ரருள்விளை யாடல்
ஆனந்த மானந்தந் தோழி.

திருஞானசம்பந்தசுவாமிகள் ஆனந்தக்களிப்பு முற்றிற்று.

திருவருள் துணை.

தமிழ்ப்பண்டிதர் திரு. மு. கோவிந்தசாமி ஐயரவர்கள் இயற்றிய

# திருஞானசம்பந்த சுவாமிகள்

## சிந்து

(பாளைவாய் கமுகில் வந்தூர் என்ற சந்தம்)

சீருயர்ந்த காழிவந்து பேருயர்ந்த மாமறையைத்
தென்சொலாலே செப்பினரின் சிந்துமே—யானும்
நன்சொலாலே சொல்லவருள் தந்துமே. (1)

காரெனவே கவுண்மதமா நீரின்வெள்ளங் கழியவார்க்குங்
கற்பகவைங் கரனம்மைக் காக்குமே—நல்ல
சொற்பொருளுந் தோன்றவழ காக்குமே. (2)

மஞ்சளிஞ்சி வாழைசாலி விஞ்சவெங்கு மலிந்திருக்கும்
வளமனைத்தும் வாய்ந்தநல்ல தேசமாம்—அது
அளவிறந்த வன்பர்களின் வாசமாம். (3)

பஞ்சரத்துப் பைங்கிளிக்குச் செஞ்சொன்மொழித் தெரிவையர்கள்
பண்முறையைப் பயிற்றுவிக்கு நாடுமாம்—மறை
யுண்மையுணர்ந் தோர்களுறை வீடுமாம். (4)

கங்கையென்னுந் துங்கங்கொண்ட மங்கைலோபாமுத்ரையென்னுங்
காவிரியின் கால்பரவு மெங்குமே—சொலிற்
பாவிரியும் பண்புடன்வி ளங்குமே. (5)

துங்கர்வாழும் பெருமைசான்ற புங்கமார்ந்த நாட்டினைம்
சோழநாடாய்ச் சொல்லுவார்கள் மேலோர்—அதை
வாழமேலாய் வாழ்த்துவார்கள் நூலோர். (6)

அந்தநல்ல நாடதனின் முந்தியதாய்ச் சண்பையாதி
யாதிரண்டா யானபெயர் பூண்டுமே—நினை
பேறளிக்கு நகருமுண்டு யாண்டுமே. (7)

பைந்தொடியோர் பங்குடையார் சுந்தரப்பேர் தோணியப்பர்
பத்தர்களைப் பரிந்தவருங் காப்பரே—அவர்
சித்தமல நீக்கியிடர் தீர்ப்பரே. (8)

கண்ணுதலே கடவுளாமென் றெண்ணியேயன் பேய்ந்துவாழுங்
கவுணியர்கள் கால்வழியே வந்தவர்—இந்த
அவனியுள்ள வேதியர்க்கு யர்ந்தவர். (9)

புண்ணியமோ ருருவெடுத்து மண்ணின்மிசை வந்ததென்னப்
போற்றநின்ற புத்தமுதை நேர்ந்தவர்—அவர்
சாற்றரிய தவத்துறையிற் றேர்ந்தவர். (10)

சிவபாத விருதயரா யவரையாரு மழைக்கலானர்
சிறுவரில்லா தேக்கமுற்று வாடியே—மனம்
மறுகவீசன் மகவளித்தா ஞடியே. (11)

அவமறுக்க வாதிரையிற் றவம்பெருக்கத் தானுதித்தார்
அம்புயத்தி னக்குழவி போலவே—இந்த
அம்புவியி லவர்வளர்ந்தார் சாலவே. (12)

மூன்றுவய தாகுமெல்லை யீன்றதந்தை நீர்படிய
முன்னியேக முன்னவரு மோடினர்—தந்தை
பின்னடந்தார் பேரருளை நாடினர். (13)

ஆன்றவந்த மதலைதன்னைச் சான்றநீரின் கரையில்வைத்தே
யந்தணர்நீ ராடிடவே போயினர்—பிள்ளை
முந்தைநினை வோடழுதல் மேயினர். (14)

மேலையெண்ண மூண்டதாலோ வேலும்பிள்ளைத் தன்மையாலோ
விம்மிவிம்மி யிருகணீர்து ளித்தனர்—என்றன்
அம்மையப்பா வென்னவேவி ளித்தனர். (15)

கோலமுறுந் தோணியப்பர் சீலமுள்ள சிகரநோக்கிக்
குழந்தைநின்றே யழுதாற்றக் கண்டனன்—அரன்
மழவிடைமே லுமையுடனே கொண்டனன். (16)

பங்கமற்ந்த பார்வதியைச் சங்கரனர் நோக்கிமுலைப்
பாலைவள்ளத் தேயளிக்கச் செப்பினர்—உடன்
நூலையொத்த விடையினளு மொப்பினள். (17)

செங்கமலத் தயற்கு மாற்கும் புங்கவர்க்கு மெட்டிடாத
சிவஞானத் தோடுபாலை யூட்டினுள்—அவர்
உவகையோடு முண்டுகளி யீட்டினர். (18)

பிள்ளையாரை யம்மையப்பர் வள்ளப்பாலா லாண்டதாலே
பேசினர்க ளாளுடைய பிள்ளையாய்—ஞான
தேசிகனு யாக்கினுணம் கிள்ளையாள். (19)

தெள்ளுசிவ ஞானத்தோடே யுள்ளசம்பந் தத்தினலே
திருஞான சம்பந்த மூர்த்தியாம்—இந்தத்
தரணியெங்கும் பரவுமவர் கீர்த்தியாம். (20)

---

(என்னடி நான்பெற்ற மங்கை என்ற சந்தம்)

தந்தையு நீராடிவந்து கண்சி வந்து மனம்நொந்து—சிறு
தனையர்முன் பாகவி ருந்து—கோபத்
தழுன்மீறிட வெவர்பாலிது சொலுவாயென வுரையோதினர்
தடியொன்றைக் கைதனிற் கொண்டு—மிகத்
தவறென வேசலிப் புண்டு. (21)

கந்தன் வடிவெனும் பாலர் அனுகூலர் அருட் சீலர்—உயர்
ககன மார்ந்தருள் சூலர்—எனக்
கனிவாகிய கவியானதில் முதலோமுற விடைசயேழுடன்
கழறினர் கைவிர னீட்டி—மறைக்
கண்ணமர் பொருளையுங் கூட்டி. (22)

தோடுடைய செவியென்னும் அருள் துன்னும் பொருள் மன்னும்-பாரில்
துலங்கி வருமது வின்னும்—இந்தத்
தொடையானது பெருமானிரு செவியேறிட நனியோதினர்
தோத்திரித் தார்முதற் காதை—அவர்
சுட்டிய தோர்ந்திலர் தாதை. (23)

பீடிதுவானதின் பின்றை மலர்க் கொன்றை யரன்மன்றைச்-சேரப்
பின்னவ ரேகினர் நன்றே—யங்கு
பெரியோர்களு மறையோர்களு மகிழ்வோடுட னணலாயினர்
பேரருள் கண்டக மஞ்சிச்—சிறு
பிள்ளையார் தம்மையே கொஞ்சி. (24)

வானவர் யாவருங் கூடி யிசை பாடி யருள் நாடி—நறு
மாமலர் தூவினர் தேடி—தோணி
வளர்நாதனி னருளேகொடு சிறுபாலரு மகமேகினர்
வண்டமிழ் மாலையுஞ் சாத்தி—அவர்
மாமலர்த் தாளிணை யேத்தி. (25)

ஞானமேயோருருக்கொண்டார்தமிழ்வண்டார் உரைவிண்டார்-மறு
நாட்கோலக் காவினைக் கண்டார்—சுர
நயமோடிவர் கவிபாடிட விருதாளமு முறலாயது
நம்பனின் செயலென வெண்ணி—அவர்
நாடினர் காழியை நண்ணி. (26)

அங்குமே நாள்சில வுற்றார் அருள் பெற்றார் இனு மற்றும்—தலம்
அடைந்திட வேமனம் பற்று—நின்றே
அனையார்பக வதியார்பதி செலலாயின ருமைநாதனை
அன்புட னேகண்டு வாழ்த்திச்—சில
ஆரமுந் தென்சொலாற் சாத்தி. (27)

எங்குமிச் சேதிபோய்ச் சேரக் களி யாரப் பரி வார—முடன்
யாவரும் வந்தனர் சார—பின்னர்
இசையாழினில் வலபாணரு மவர்பாடலை யுறவீணையி
லிசைத்தன ரன்புடன் பாடி—அவர்
இன்சொலைக் கண்டுகொண் டாடி. (28)

பூமிக்குச் சுழிமுனை நாடித் தலம் நாடி கவி பாடி—பல
பூசுரர் தம்மொடுங் கூடி—பாரின்
பொடியானதில் பதமாமலர் நவிவாயரத் துறையானதைப்
புண்ணியர் சேர்ந்தனர் சென்று—குளிர்
புணரியில் வீழ்ந்தன னென்று. (29)

சாமிக்கு மனம்டோறுக் காது தரை மீது நடவாது—வரத்
தந்தனர் சிவிகையப் போது—இன்னும்
சத்ரமாதிய முத்திருல்தர வத்தனர்செயல் மெத்தவேயெணிச்
சந்ததம் பணிந்தவை பெற்றார்—அரன்
தாளிணை துதித்ததி லுற்றார். (30)

---

(சந்தவரை வந்தகுக என்ற சந்தம்.)

ஆந்தலமுஞ் சென்றுதமிழ் மாலை—பல
வேய்ந்தவருங் காழியுடை வேலை—முறை
யாரணியர் சாத்தினர்மும் நூலை
முத னூலை ஞானப் பாலை—வாங்கி
யன்றருந்து வார்க்களித்தார் மேலை. (31)

ஏந்துமவர் சங்கையெலா நூக்கி—மறை
வாய்ந்தபொரு ளுண்மைவெளி யாக்கி—ஆதி
யைந்தெழுத்தின் சீரைநனி தூக்கிக்
கவியாக்கி யிரு ணீக்கிப்—பின
ரேகினரே சேத்திரமு நோக்கி. (32)

இந்தவித மேதலங்கள் போந்தார்—அவர்
இன்றமிழில் மாலைபல வேய்ந்தார்—வள
மேந்துதுறை சைப்பதியைச் சேர்ந்தார்
களிகூர்ந்தார் அவண் வாழ்ந்தார்—பிதா
யாகமதைச் செய்யமன மோர்ந்தார். (33)

வந்துபிள்ளை யாரிடமே சொற்றூர்—இதைச்
சிந்தையெணி யார்வமிக வுற்றூர்—உடன்
மாசில்மணி யாரிடமே துற்றூர்
தனம் வற்றாக் கிழி பெற்றூர்—மறை
வண்டமிழை யேயுரைக்கக் கற்றூர். (34)

சேருமடி யார்பலரைக் கூட்டிப்—பல
சேத்திரங்கள் யாவையுமே காட்டிப்—பின்னர்
சேர்ந்தனர்கள் மாமருகல் மாட்டில்
விஷ மோட்டி மண மூட்டிப்—பின்னும்
சென்றடைந்தார் மாமுருகர் வீட்டில். (35)

காருவரி நீத்தவப்ப மூர்த்தி—வரக்
கண்டடைந்தார் மாமிழலை யேத்தித்—தரை
காய்ந்ததனு லாக்கமெங்கு நாத்தி
முருகாத்தி முடி சாத்தி—யான
கண்ணுதலை வேண்டினர்கள் வாழ்த்தி. (36)

கண்ணுதலுங் காசளித்தார் வேண்டி—அதைக்
கண்டடியா ரோடுகளி றாண்டி—மறைக்
காடடைந்தார் யாவையுமே தாண்டி
    மூனை யாண்டில் மறை தீண்டி—யிட்ட
    காப்பதனைக் கண்டனர்க ளீண்டி. (37)

பண்ணுறவே பாடியதைப் போக்கச்—சிறு
பாலரவ ரப்பரையே கேட்க—அவர்
பாடியுமே பெற்றிலது நீக்கம்
    அரு ணோக்க மில தாக்கு—மெனப்
    பாடினரே வேறுசில பாக்கள். (38)

பின்னரது நீங்கவிவர் போனார்—உறை
பிஞ்ஞகனைக் கண்டுமகிழ் வானார்—இரு
பேர்களுமே பாவுரைத்தார் தேனா
    அது மேனா ளெனத் தானா—அடை
    பெற்றியுறப் பாடினர்சே யானார். (39)

இன்னணமே யாங்குசில நாளும்—சனி
எய்தினர்க ளோதியான் றாளும்—வள
மேய்ந்ததிருப் பாண்டிநக ராளும்
    முறை கேளும் தரை நீளும்—செப்ப
    வின்றமிழை யீந்தருளும் வேளும். (40)

பாயுடையும் பீலியுங்கை தாங்கிப்—புழு
வாயுடைய வெஞ்சமண ரோங்கி—வரப்
பாண்டியனும் மெய்வழியி னீங்கி
    யவர் பாங்கில் மன ஓங்கி—புறப்
    பத்தினியு மந்திரியு மேங்கி. (41)

தூயவழி யேயிருந்தார் வேட்டுப்—பின்னர்
சொற்பயிலும் பிள்ளைசெயல் கேட்டுச்—சில
தூதரையும் போக்கினரந் நாட்டு
    மறை காட்டு முறை நாட்டு—ஞான
    சூரியரைப் போயடைந்தார் தேட்டு. (42)

(தெள்ளுதமி ழுக்குதவு சிலன் என்ற சந்தம்.)

தெள்ளுசிவ ஞானமுறுந் தேவா—மறைச்
செந்தமிழை யோதியகன் ஞுவா—முத்துச்
சிவிகை யுடனேமற்றுங் கவிகை தனையும்பெற்ற
சீரா வருள் கூராய் (43)

விள்ளரிய தாளமுறுங் கையா—முழு
வெண்ணிறத்த நீறணியு மெய்யா—எங்கள்
விழுமை யார்ந்ததிரு வழுதி சார்ந்தநிலை
விட்டான் மதி கெட்டான். (44)

வீதிகளின் மாமறையின் கீதம்—இலை
வெஞ்சமணர் செய்திடுவர் வாதம்—இனும்
வேட்ட லாதிவினை நாட்டி லேதுமிலை
வேலா வனு கூலா. (45)

பூதிமணி சாதனங்கள் தள்ளி—அவன்
புன்சமணர்க் கேபுரிந்தான் பள்ளி—சிவ
பூசை யேதுமிலை நாச மாயினது
போதா வருள் நாதா. (46)

என்றிடலு மேகமனங் கொண்டார்—உமை
யீந்தமுலைப் பாலமுதை யுண்டார்—இதை
இருந்த வப்பரிடம் பொருந்தச் செப்புதலும்
ஈதும் அரசோதும். (47)

நன்றலநீ ராங்கடைத லைய—அவர்
ஞாயவழி சென்றிடாத பொய்யர்—அன்றி
நாளும் திருத்தமிலை கோளும் பொருத்தமிலை
நண்ணீ ரிதை யெண்ணீர். (48)

சங்கரனார் சிந்தைகுடி கொண்டார்—இனிச்
சத்துருக்கள் துன்பமக் குண்டா—எனத்
தானை யோதிசுவ கோளை வெல்பதிகம்
தந்தார் காழி வந்தார். (49)

அங்கமுற நீறதனைச் சாத்தி—மறை
யாரணியர் தாளிணைக ளேத்தி—அவர்
ஆதி யைந்தெழுத்தை யோதி வந்தடுத்தார்
ஆடல் உறுங் கூடல். (50)

வெஞ்சமணர் தீக்கனவு கண்டார்—அவர்
வேர்த்துமிகச் சிந்தையிடி யுண்டார்—முகம்
மெத்த வாடினர்க ளொத்துக் கூடினர்கள்
விரைந்து மனங் கரைந்து. (51)

கஞ்சமுத லாங்கருவி மோத—முகிழ்
கையினர்க ளோமரவென் றோத—முத்துக்
கவிகை நிழல்பரப்ப வடியர் பெருக்கமொடு
கலந்து முக மலர்ந்து. (52)

பாலர்வர மந்திரிமுன் போந்து—தரைப்
பற்றொழிந்த மாமரம்போல் வீழ்ந்து—மிகப்
பரவி யேத்திடலும் பரமர் தூக்கியிவை
பகர்வார் குக னிகர்வார். (53)

சீலமுறு மாசிபல விண்டார்—மதிச்
செஞ்சடையார் கோயிலெதிர் கண்டார்—உடன்
செங்கை குவித்திறைஞ்சி மங்கை யெனும்பதிகம்
தெரித்தார் பணி விரித்தார். (54)

---

(சென்னிகுளநகர் வாசன் என்ற சந்தம்.)

மின்னு மணிமுடிக் கோயில்—வல
மேவியே வந்தனர் வாயில்—அங்கு
விரைமேவிய குழலாளவள் பணிவோடொரு புறமேயுற
விழைந்தார் மனங் குழைந்தார். (55)

மன்னுவா கீசருந் தங்கு—மடம்
மந்திரி காட்டிட வங்கு—வரும்
மறையோரொடு பரிவாரமு முடனேவர வருணைதரும்
வசித்தா ருண்டி புசித்தார். (56)

பிள்ளையார் தம்மையே கண்டு—சமண்
பேயர்க ளச்சமும் கொண்டு—மன்னர்
பெருமானிட மடமீதிலே கனன்மோதிட விடுவேமெனப்
பேச மனங் கூச. (57)

கள்ளரின் சொற்கொடு மன்ன—னிதைக்
கடுகவே செய்திடு மென்ன—அவர்
கனலேகொடு குருநாதரின் மடமீதிட வடியார்சிலர்
கண்டார் வெருக் கொண்டார். (58)

பாண்டியன் றேவியைக் காக்க—அதைப்
பையவே வேந்திடம் போக்க—அவர்
பத்துக்கவி நத்திச்சொல மெத்தச்சுர முற்றித்துயர்ப்
பட்டான் முறை கெட்டான். (59)

ஆண்டகை யார்மடத் தேதும்—கனல்
ஆற்றிட நீத்ததப் போதும்—அரன்
அடிமாமலர் தினமோதிய வடியார்துய ருறுவார்களோ
ஐயா இது பொய்யா. (60)

வேந்தனும் நொந்தனன் வாடி—அதை
வீணரு நீக்கவே கூடி—வந்து
வியப்பேகொடு மயிற்பீலிக ளெடுத்தேயுடல் தொடத்தானவை
வெந்த பொரி சிந்த. (61)

ஏந்திய குண்டிகை நீரைத்—தெளித்
தேத்தினர் நான்முக ஞரை—அது
எரிவார்நெயின் மிகவீசிட மனமேவக மெலிவாயின
னேங்க வன லோங்க. (62)

(பாதி ராத்திரி வேளையில் என்ற சந்தம்.)

பாவை பார்த்திதை நாயகன் மஞ்சப்
பக்கத்தில் வந்து நின்று—படு
பாவிகள் செய லென்று—சிறு
பாலரைத் தொழி னின்று— சுரம்
பட்டுப் போயிடுங் கர்த்தனே யெனப்
பகர்ந்தனள் மதி நன்று. (63)

ஆவி போகுதே யய்யய்யோ வந்த
ஐயரைக் கொண்டு வாரும்—இந்த
வாரழற் சுரந் தீரும்—மதி
யமைச்சரேயுட னீரும்—முன்னர்
அம்மை யார்முலைப் பால் பருகிய
அண்ணலைக் கொண்டு சேரும். (64)

என்று கூறிட நாயக னிடம்
ஏகி யேயிவை சொன்னர்—அவர்
இறைய ஞர்திரு முன்னு—இது
ஏற்கு மாவுமக் கென்னு—மிக
இனிமையார் தமிழ்ப் பதிகமே சொலி
எய்தினர் குக னன்னர். (65)

வென்றி வேற்கர வேந்துபால் மந்த்ரி
வேக மாயோடிப் போந்து — தங்கள்
வெந்துய ரலாந் தீர்ந்து — சுகம்
மேவிட வரு ளீந்து — காக்க
வேண்டியே பிள்ளை யாரு மேயினர்
வேந்தரே யென்றுர் தாழ்ந்து. (66)

ஞான போனகர் மீனன் கோயிலை
நண்ணியே மணிப் பீடம்—உற்று
நாடினர் மன்னன் வேடம்—அந்த
நாத்திகர் செய்யார்ப் பாடம்—கண்டு
நங்கை யானவள் சங்கை மேயினள்
நாடுமோ தீயைக் கீடம். (67)

ஆன காலையில் வேந்தனு மிக
அயர்ந்திரு திறத் தாரை—எவர்
அகற்றுவார் பிணி வேரை—அவர்
அணிவரே சயத் தாரை—என
ஆணையே தரக் கூடினர் சம
ணொருமந்த வூரை. (68)

தீய பாதகர் கூடியே மன்னன்
தேகத்தி னிடப் பாக—முறு
தீச்சுரந் தணி வாக—மயிற்
சிறகினாற் றடவ வேக—மிகச்
சீற லாயது மாறவே யிலை
செழியனே பட்டான் சோகம். (69)

ஆய காலையிற் பிள்ளையார் வலத்
தாகியே பொடி தூவ—உடன்
அப்புறங் குளிர் மேவ—சுரம்
அனைத்துமே யிடந் தாவ—மன்னன்
அயர்ந்து வாடினன் றொடர்ந்து பிவியா
லாறுக ருடல் நீவ. (70)

அரசன் வேதனைத் துயரினாற் பிள்ளை
யாரை யேகெஞ்சி நாட—அவர்
ஆக மேற்பொடி போட—உடன்
ஆறி யேசுரம் ஓட—மன்னன்
ஆறு கர்களை யேகு மென்னவே
அறைந்தனன் முகம் வாட. (71)

விரவி யோங்கிய சுரமு நீங்கிட
வேந்தனுங் களி யோங்கிச்—சிறு
வேதிய ரடி தாங்கிச்—சமண்
வெய்யரின் குழு நீங்கிப்—பண்டை
வேத மார்க்கமு நீதமாய்க் கொடு
மேயினு னுடல் வீங்கி. (72)

வெய்ய ராருக ருய்யு மாறினி
வேண்டியே யவர் கூடித்—துயர்
மேவியே முகம் வாடி—யினி
வென்றிடு முறை தேடிப்—பாண்டி
வேந்த னாிடம் சேர்ந்துமே யிவை
விளம்புவா ருள நாடி. (73)

எய்து வாரெமின் றுய்யதா முறை
யெழுதியே யழ லிட்டும்—கன
லெரித்திடா துறின் மட்டும்—அதை
யேற்றமா கக்கொள் ளட்டும்—என
இறைவ னார்முன மறைய லாயினர்
ஏங்கியே யிடி பட்டும். (74)

மன்ன னாிதைப் பிள்ளையா ரிடம்
வழுத்தவே யவ ரொப்பக்—கனல்
வளர்க்கவே யுடன் செப்ப—அரன்
வைப்பரோ முறை தப்ப—என
மாது பாகரை யோது மாமறை
மன்ன நாளைச் செறிப்ப. (75)

அன்னதிற் போக மார்த்த பூண்முலை
யாகிய கவி பார்த்தார்—அதை
ஆரழ றனிற் சேர்த்தார்—மன்னன்
ஐயமு மறத் தீர்த்தார்—ஏடும்
ஆணிப் பொன்னெனக் காணக் கண்டுடன்
அமணரோ வுடல் வேர்த்தார். (76)

(ஆறுமுக வடிவேலவனே கலி என்ற சந்தம்)

தீய சமணருந் தீட்டிய வோலையைச்
செந்தழ லிற்போட—அவர்
திரும்புமுன் னேயது தீய்ந்தது கண்டுடன்
சிந்தை மிக வாட. (77)

ஆய விரண்டு முறையினிற் றோல்வி
யடைந்தன மேனு மெய்யா—எமக்
கன்பாக வேயினு மோர்முறை யேசெய
வாணையுந் தாருமையா. (78)

என்றவர் கூறிட மந்திரி யாரெதி
ரெய்தி யிவைசொல்வார்—சரி
யிம்முறை தன்னிலுந் தோற்றிடற் சூளுற
வேதென வேபுகல்வார். (79)

வென்றிகொள் ளேமெனிற் கூர்கழு வேறியே
வீயுவ மேயாவி—என
வேதியர் தம்மிடம் போயிவை கூறினர்
வேந்த ரருள் மேவி. (80)

இன்னது கேட்டவ ராற்றிடும் வாதமும்
யாதென வேநீரில்—வரை
யேடது தானெதி ரேறிடச் செய்தலே
யென்றனர் கனேரில். (81)

அன்னதே யாமெனில் வாருமென் றேபிள்ளை
யாரடைந் தார்வையை—வாழ்க
அந்தணர் வானவ ரானின மாங்கவி
யாக்கின தும்மெய்யே. (82)

பீடுறு மிக்கவி யார்திரு வேடதைப்
பிள்ளையார் நீர்போட—அது
பேசிய மெய்வழி யீதெனக் காட்டிப்
பிறங்கியெ திர்த்தோட. (83)

நாடினர் யாவரு மார்கலி யாமென
நாட்டின ராம்வாழி—அந்த
நாத்திக ரேடது நீர்வழி யேகியே
நண்ணிய தேயாழி. (84)

வேந்தனு மோங்குக வென்றுநம் பிள்ளையார்
விளம்பிய சீரானே—இந்த
மேதினி யுள்ளவர் காணவே வேந்தனை
விட்டது வெங்கூனே. (85)

நீந்திய வேடது தங்கிட வன்னியு
நேர்பதி கம்பாட—மந்த்ரி
நீர்க்கரை யோரமே வாம்பரி மேற்கொடு
நேடினர் நீங்கோட. (86)

மந்திரி யேடதை யேந்தியே சாமிமுன்
வைத்திட வேகண்டார்—அதை
வாங்கியே யாவருங் காண்டரக் காட்டினர்
மன்னர் களிகொண்டார். (87)

பந்திய தாய்க்கழு நாட்டியே தீயவெம்
பாதக ரையேற்றி—அவர்
பாண்டிய நாட்டினி லற்றிட வாக்கினர்
பாலரின் ருள்போற்றி. (88)

அங்குநம் சாமியு நாள்சில வுற்றன
ராண்டுபி தாமேலோர்—பிள்ளை
யன்பினுற் பிள்ளையைக் காணவே வந்தன
ரார்த்தனர் முந்நூலோர். (89)

சங்கர ரூருறை மற்றைய சேத்திரஞ்
சார்ந்தன ரேபாடி—பின்னர்
தங்குவா கீசரு மன்னரு முய்ந்திடச்
சற்குரு கொண்டாடி. (90)

ஆகம மார்க்கமே திட்சையுஞ் செய்தன
    ராசிரி யாராகி—வந்த
ஆரண வேதியர் தம்மொடு மேகினர்
    ஆண்ட சிவயோகி. (91)

சாகரம் போலடி யார்களும் பின்வரத்
    தாண்டினர் நம்பாண்டி—வளம்
தான்மிகக் கொண்டிடுஞ் சோழநா டண்மினர்
    தந்தையர் சொல்வேண்டி. (92)

---

(பூமி மெச்சிடு மண்ணு மலைக் கோர் துணை என்ற சந்தம்.)

பிள்ளையானவரு முள்ளிவாய்க் கரையைக் கூடினர்
    வெள்ளம் நாடினர் கவி பாடினர்—அந்தப்
பெருகு வெள்ளமீது படகு தள்ளியோடி யாடினர். (93)

என்ன லானபுத்தன் சென்னி மீதிலிடி வீழ்த்தினர்
    மதந் தாழ்த்தினர் சிவந் தாழ்த்தினர்—வாதில்
எதிர்க்க லானபுத்தர் சிவத்தைப்பேணவைத்து வாழ்த்தினர்.

அங்கு நீங்கியப்பர் தங்கு பூந்துருத்தி போயினர்
    உரை மேயினர் களி யாயினர்—காழி
யடைய வேண்டிவந்தா ரமுதை வாங்கியுண்ட வாயினர். (95)

துங்க மார்ந்ததிருத் தொண்டை மண்டலமு நண்ணினர்
    அனற் கண்ணினர்த் தொழ வெண்ணினர்—அங்கோர்
தொண்ட ரேகியிவை விண்டு மேயினருட் புண்ணினல். (96)

அத்த ஞாதுவா வைக்கலான பனை யேதுமே
    யொரு போதுமே பலி யாதுமே—உற
அருகர் யாருநகை செயவு மாயினரென் னோதுமே. (97)

பத்தி யாகவிதைச் செப்ப லாகவவை காய்க்கவே
    அர னுக்கவே இவர் கேட்கவே—உடன்
பனைக ளத்தனையுங் குலைகள் முற்றினவால் நோக்கவே (98)

ஒற்றி யூரைப்பினர் பற்ற லாகிச்செல வாங்குமே
புக ழோங்குமே யதன் பாங்குமே—உள்ள
ஒப்பி லாதமயி லைக்கு வாருமெனத் தாங்குமே. (99)

பெற்றி வாய்ந்தசிவ நேயச் செல்வரெனும் பேரினர்
முல்லைத் தாரினர் மிகச் சீரினர்—வந்த
பிள்ளை யாரையெதிர் கொள்ள லாகிமுனம் நேரினர். (100)

செட்டி யாருமுன மாற்ற லானதவச் சீரினல்
மிக வேரினள் திரு நேரினள்—தன்னைச்
சிறுமி யாகப்பெற்று முருக நாதர்க்காக்கு நாரினர். (101)

மட்டு வார்குழலி பத்தி யோடுதொடை செய்யவே
மலர் கொய்யவே செல வெய்யவே—நாகம்
வந்து தீண்டவவள் வெந்து மாண்டனளுள் நையவே. (102)

கண்டு தாதையவ ளென்பு யாவையுமே கூட்டினர்
குடத் தீட்டினர் அணி பூட்டினர்—அதைக்
காழி வந்தகுரு நாதர் கண்டுகொளக் காட்டினர். (103)

கொண்ட நோக்கமதைப் பிள்ளை யாருமனத் துன்னினர்
அருள் மன்னினர் அவர் பொன்னினர்—உடல்
கூறு கொண்டகுடஞ் சேரு முன்றிலெனப் பன்னினர். (104)

---

(பொன்னுலவு சென்னிகுள என்ற சந்தம்.)

சொன்னபடி யன்னதையு மின்னுமுடிக் கோயிலெதிர்
தூக்கியதை வைக்கவவர் கண்டனர்—அந்தத்
தோகையுயிர் கொள்ளமனங் கொண்டனர்—வடி
சோறுமாதிய லீசனாடி நாளுமோதிடு வாருமேகொளச்
சுந்தரி யுதவிடாது போதியோ—எனத்
தந்தனர் பதிக மோதி வேதியோர். (105)

மின்னலொளி தன்னைநிகர் கன்னிகுட மன்னிவெளி
வேகமொடு வந்தடியில் வீழ்ந்தனள்—உடன்
வேதியரை வேட்டிடவே தாழ்ந்தனள்—அவர்
வீத லேயற வாஷியானதை யீதலானவ ராதலாலது
மெத்தவும் பிழையதாகச் சொற்றனர்—இனும்
மற்றைய தலமுமேக லுற்றனர். (106)

ஆகுமந்த வேளைகண்டு தாதைவந்து காழிகொண்டே
யாளுடைய பிள்ளையாரைச் சேர்த்தனர்—ஒரு
அழகுடைய மாதையுமே பார்த்தனர்—அவர்க்
காசையேதுமி லானபோதிலும் வேதமோதிய நீதியானதை
யாற்றிட மனதிலெண்ணி யொப்பினர்—இந்த
மாற்றமு முலகிலெங்குஞ் செப்பினர். (107)

நாகமெங்குந் தேவர்வந்து கூடிநின்று வாழிதந்து
நாடியுறச் சேர்த்துவந்தார் யாரையு—மண
நாளி னன்று நண்ணினர்நல் லூரையும்—அங்கு
நாலுவேதமு மோதலாயிட வாகமேயிடு பூதியேகொடு
நன்குறவே வந்தடைந்தார் கந்தரும்—நம்பி
மங்கையொடு முற்றூர்மணப் பந்தரும். (108)

சின்னமுதல் மன்னுமொலி துன்னவவர் பொன்னொளிருஞ்
செய்யதிரு நாணையுமே பூட்டினர்—பினர்
தீயைவல மேவியுரை நாட்டினர்—இந்தத்
தீயவாழ்வினை யானுமேபெற நேரலாயது மாதுமேவரச்
சேருவன் சிவனின்றுளென் றோதினர்—உடன்
ஓருரை பகருந்தோடெய் காதினர். (109)

கன்னியொடு மின்னுமண மன்னினரும் வன்னியதிற்
கடுகியுற வாவெனவே நாட்டினர்—எதிர்
காணச்சிவ லோகமதைக் காட்டினர்—உடன்
காதலாகிய பாடலேசொலி யாருமேசிவ லோகமேவிடக்
காழியின் முதல்வர்செய்தார் வேண்டியே—சுரர்
வாழியும் பகரலானா ரீண்டியே. (110)

(மஞ்சுநிகர் குந்தள என்ற சந்தம்.)

சந்தவடி வேலவன் வாழி
தமிழ் மறையை யுதவி யருள்
சாமிநாத தேசிகர் வாழி—உமை
தந்தபாலைய ருந்தலாகிமுன் வந்தஞானசம் பந்தசாமியாஞ்
சற்குருதா ளிணைகள் வாழியே
தரணியுற்ற விருளகற்றும்
தம்பிரானும் வாழி வாழியே. (111)

விந்தநிகர் மாடமுஞ் சேர்ந்து
நிறை மதுரைப் பதி வளரும்
வேதியரின் மாமர பார்ந்து—வாழ்கோ
விந்தசாமிசொல் சிந்துமேதினி நின்றுலாவிட விந்துசூடியை
வேண்டுவமே வாழ்த்தி வாழியே
விருப்ப மொடு பிழைபொறுத்து
மேன்மைபெறச் செய்வர் வாழியே. (112)

திருச்சிற்றம்பலம்.

56880



விவேகாநந்தா அச்சகம், மதுரை-54.

10 SEP 1956